# காலி மா நகர சபை

## காலி மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜுன் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலி மா நகர சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சம்பள மீளளிப்புத் தொகையாக உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 126,128,000 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் பங்கீடு செய்யப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டில் ஊழியர் பிணைக் கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக்காக கிடைத்திருந்த ரூபா 405,176 இற்கான வட்டித்தொகை ஊழியர் பிணை வைப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக ஊழியர் பிணை வட்டிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் என காட்டப்பட வேண்டிய ரூபா 405,176 தொகையினை ஊழியர் பிணை வைப்பு வட்டித் தொகையினை முதலீடுகளில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையின் பயிர்கள் விற்பனை மற்றும் சேதனப் பசளை விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 84,137 பலவின வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் வருடத்திற்கான வருமானம் ரூபா 84,137 இனால் குறைவாகவும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் அதே தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நாட்குறிப்பில் காசு மாற்றல் கணக்கு என காட்டப்பட்டிருந்த ரூபா 7,369,799 இற்கான வரவு மற்றும் செலவு மீதிகள் வருட இறுதியில் ஒவ்வொரு கணக்கையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 615,383 இற்கான தொங்கல் கணக்கில் வரவு மீதியினை இனங்கண்டு கணக்குகளை சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ஊ) ஓய்வுபெற்ற சபையின் ஊழியர் இருவருக்குச் செலுத்தியிருந்த ரூபா 46,734 ஊழியர் பிணை வைப்பினை ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கில் இருந்து அகற்றி காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது காலி சர்வதேச கிரிகெட் விளையாட்டு திடலில் நடத்தப்பட்ட 2 டெஸ்ட் போட்டிக்கான நுழைவுச் சீட்டுகளுக்காக அறவிடப்பட்ட ரூபா 1,689,100 இற்கான களியாட்ட வரி வைப்புத் தொகையில் இருந்து வருமானத்திற்கு எடுக்க வேண்டிய தொகையினை கணக்கிட்டு வருடத்திற்கான வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) 2007 ஆண்டின் போது பழைய மற்றும் பழுதடைந்த வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் என்வற்றை அகற்றியதன் மூலம் ரூபா 638,008 தொகையொன்று கிடைத்திருந்த போதும் அச் சொத்துக்களின் கிரயத்தினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமானமுடையோருக்கான வீடமைப்பு செயற்திட்டத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 7,189,719 கடன்தொகைக்காக மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 448,544 இற்கான வட்டித் தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் முன்னைய ஆண்டிற்கான செலுத்த வேண்டிய வட்டி ரூபா 2,174,931 தொகைக்காக கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2004 திசெம்பர் 26 திகதிய சுனாமி பேரழிவினால் சபையின் ஆதனங்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக நட்டங்கள்/ சேதங்களை கணிப்பீடு செய்து கணக்குகள் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை கணித்து நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்கான நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 73,892 இற்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ங) முன்னர் குறைவாக பில் பண்ணப்பட்டிருந்த ரூபா 92,000 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானம் நாட்குறிப்பு இலக்கம் 14 மூலம் அனுமதிப்பத்திரக் கட்டணக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக ஏனைய அனுமதிப்பத்திரக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 92,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ச) மீளாய்வாண்டின் போது ஆதனங்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் ஆதனங்கள் மூடிவைத்தல் தொடர்பாக ரூபா 727,464 தொகைக்கான வீதவரி பில் பண்ணுதல் பதிவழித்தல், என்பவற்றை வீதவரி வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல், உதவி நிதி, பங்களிப்பு மற்றும் மானிய செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவுகள் ரூபா 727,464 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 2,972,604 இற்கான வீத வரி எழுத்தாணைக் கட்டணம் மற்றும் ரூபா 579,928 இற்கான வாடகை தண்டப்பணம் என்பவற்றை குறிப்பிட்டு கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் முறையே வீதவரி மற்றும் வாடகை வருமானம் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ட) 2006 ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்கொடுத்தோருக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது நிர்மாண வேலையின் பெறுமதியினை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் 2006 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை நிர்மாண வேலைக் கணக்கில் ரூபா 41,451,479 இற்கான மீதியொன்று காணப்பட்ட போதும் முடிவுற்ற வேலைகளை இனங்கண்டு அவற்றிற்காக கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ண) பதவியணிக் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி ரூபா 34,541,548 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 24,938,209 தொகை என குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 9,603,339 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 81,122,222 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,632,572 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 489,650 ஆகும்.

1.3.4 தீர்க்கப்படாத கணக்குகள்

---------------------------------------------

05 வருடங்களை விட பழமை வாய்ந்த முன்கொண்டு வரப்படும் ரூபா 9,091,923 இற்கான 03 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 6,612,287 இற்கான 04 பொறுப்பு மீதிகள் என்பனவற்றை தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

(அ) முறையாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, அட்டவணைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், முறையான பேணப்பட்ட கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் காலப்பகுப்பாய்வுகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 206,924,204 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 45 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 80,672,520 ஆகும்.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.) | |
| (i) | நி.பி. 134(2) | மீளாய்வாண்டிற்காக அகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 371(2) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 625,086 இற்கான முற்பணத்தினை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 396(ஈ) | 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத செல்லுபடியாகும் காலத்தை கடந்துள்ள ரூபா 36,898 இற்கான 19 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (iv) | நி.பி. 486 | ரூபா 682,117 இற்கான 21 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (v) | நி.பி. 570 மற்றும் 571 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் மீதி ரூபா 63,870,355 தொகையாக காணப்பட்டதுடன் காலங்கடந்துள்ள திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vi) | நி.பி. 702(3) | கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | 2003 திசெம்பர் 02 திகதிய இலக்கம் 01/2003 கொண்ட அரசாங்க சேவை சேமலாப நிதிய சுற்று நிருபம் மற்றும் 2003 இன் 17 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதியச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதியச் சட்டம் | ஓய்வூதியம் இல்லாத அரசாங்க சேவையில் கடமைபுரியும் நாளாந்தக் கொடுப்பனவு மற்றும் மாதாந்தப் படி மற்றும் சம்பளங்களின் மீது 8% பங்களிப்புத் தொகை அறவீடு செய்து அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். எனினும் 64 ஊழியர்கள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மா நகர சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 6,957,319 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,816,306 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர சபைத் தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதி வரி மற்றும் வரி | 43,750 | 40,250 | 3,501 | 44,400 | 40,846 | 3,555 |
| வாடகை | 18,175 | 18,671 | (496) | 15,775 | 13,284 | 2,492 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 13,910 | 12,152 | 1,758 | 13,012 | 12,043 | 969 |
| ஏனைய வருமானங்கள் | 238,778 | 193,604 | 45,174 | 213,208 | 171,992 | 41,216 |

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 5,458,913 தொகையான தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

2.2.4 நிலுவை வருமானம்

(அ) வீத வரி மற்றும் வரி

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 60,428,239 தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 252(1)(அ),(ஆ) மற்றும் 254(அ)(1),(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏனைய வருமானங்கள்

02 வருட காலம் முதல் 15 வருட கால வீச்சில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 17,215,337 இற்கான வருமானத்தினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) சுற்றுலா வீடுகளில் இருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணம்

---

மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(அ) இன் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தித் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலை மற்றும் விடுதிகளில் இருந்த அவற்றின் முன்னைய வருட பெறுவனவுகளில் இருந்து 1% இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட 07 ஹோட்டல்கள் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் விடுதிகளில் இருந்து 2007 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை 1% அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதிடப்பட்ட | உள்ளவாறான | முரண் | பாதிடப்பட்ட | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 209,330 | 170,891 | 38,439 | 201,252 | 163,315 | 37,937 |
| ஏனையவை | 71,500 | 70,065 | 1,435 | 61,817 | 72,310 | (10,493) |
| உப கூட்டுத் தொகை | 280,830 | 240,956 | 39,874 | 263,069 | 235,625 | 27,444 |
| மூலதன செலவுகள் | 33,780 | 7,187 | 26,593 | 23,319 | 6,132 | 17,187 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 314,610 | 248,143 | 66,467 | 286,388 | 241,757 | 44,631 |

2.4 மிகை விதிப்பு

---

மீளாய்வாண்டு இறுதி வரை நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் வழங்கப்பட்ட 05 மிகைவிதிப்புக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 160,494 ஆகும்.

2.5 மனித வள முகாமைத்துவம்

---

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 07 | 06 |
| இரண்டாரம் தரம் | 151 | 151 |
| ஆரம்ப தரம் | 633 | 460 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 64 |

2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட முகாமைத்துச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ பிரதியீட்டு/ ஒப்பந்த மற்றும் ஏனைய ஏதேனும் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் அதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள போதும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் சபையினால் அமைய, தற்காலிக பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் 64 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

2.6.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 வங்கிக் நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 33,967 இற்கான தொகையொன்று 03 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட போதும் அக் கணக்குகளை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.6.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,938,209 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலப்பகுதியை மிகைத்துள்ள அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 692,252 ஆகும்.

2.7 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) வருமானத்தினை பதிவழித்தல்

---

மா நகர சபை அதிகாரச் சட்டத்தின் (252 அதிகாரம்) 266(அ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒரு நபரிடம் சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையொன்றினை அறவிட முடியாமை மீது அத் தொகையினை பதிவழிக்க வேண்டும் என சபை கருதுமிடத்து பிரேரணை அங்கீகாரத்தின் மூலம் கைவிடப்பட முடியும். ஒரு ஆயிரம் ரூபாவை மிகைத்த தொகையினை கைவிடப்படுவதல் தொடர்பாக அவ்வாறான அனைத்து பிரேரணைகள் அங்கீகாரங்களும் அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயினும் காலி மா நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கடைகளில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 576,259 கடை வாடகைத் தொகை 2010 மார்ச் 30 இல் நடைபெற்ற சபைக் கூட்ட இலக்கம் 02(14) சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏடுகளில் இருந்து பதிவளிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஆ) நகர சபை அங்கத்தவர்களின் தொலைபேசிப் படி செலுத்துதல்

---

மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 188(கக) பிரிவின் குறிப்பிட்டுள்ளவாறு நகர முதல்வருக்கு பிரதி நகர முதல்வருக்கு மற்றும் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து படிகளும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 289 இன் பிரகாரம் செயற்பட்டு மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கும் வரை செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு அங்கீகாரம் பெறாமல் 2002 ஆகஸ்ட் 30 திகதி சபைக் கூட்டத்தின் 5(11) கொண்ட சபை அங்கீகாரத்தின் பிரகாரம் சபை அங்கத்தவர் ஒருவருக்கு தொலைபேசி பில்பத்திரம் இன்றி மாதாந்தம் ரூபா 2,000 இற்கான தொலைபேசி படியொன்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய சபைத் தீர்மானம் 5(12) கொண்ட சபை

அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 2,500 தொகையொன்றும் 2003 ஜுலை 10 திகதி சபைக் கூட்டத்தின் 5(12) கொண்ட சபை அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 3,500 தொகையும் 2004 நவம்பர் 30 திகதிய சபைக் கூட்டத்தின் 5(12) கொண்ட சபை அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 4,500 தொகையொன்றும் 2005 திசெம்பர் 30 திகதிய சபை கூட்டத்தின் 5(16) கொண்ட சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 5,000 தொகையும் ஆக 04 சந்தர்ப்பங்களில் படிகளை அதிகரித்து 2002 செப்டம்பர் முதல் 2011 ஜுலை வரை தொலைபேசிப் படியாக ரூபா 7,773,333 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

2.8 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

பண்டார நாயக்கா ஒழுங்கையில் சனசமூக நிலையம் நிர்மாணித்தல்

----------------------------------------------------------------------------------------------------------

நிர்மாண வேலைகளின் மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,022,555 ஆக காணப்பட்டதுடன் அதே தொகைக்கே 2008 ஆகஸ்ட் 04 திகதி கிந்தோட்டை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்ததுடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. கணக்காய்வத் திகதியாகிய 2011 செப்டம்பர் 26 திகதி வரை நிர்மாண வேலைக்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 736,252 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2011 செப்டம்பர் 26 மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாண வேலையின் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியாகிய 2008 ஆகஸ்ட் 04 திகதி முதல் மூன்று மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் பின்னர் 2009 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 செப்டம்பர் 26 திகதி வரையும் தரை மாடியில் கொங்கிரீட் தட்டு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிர்மாண வேலையின் தாமத காலம் 01 வருடமும் 09 மாதங்களை மிகைத்திருந்த போதும், நிர்மாண வேலை பூர்த்தி செய்யாமை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) முதலாம் மாடியின் நிர்மாண வேலைக்கு பாதகமாக காணப்படும் கொங்கிரீட் தட்டு முதல் சுமார் 8 அடி உயரத்தில் திறந்த நிலையில் காணப்பட்ட மின்கம்பிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) அங்கீகரிக்கப்பட் கட்டிட வரைபின் பிரகாரம் நிலைகள், யன்னல்கள் என்பன பலகையினால் செய்யப்பட வேண்டும் எனினும் அலுமினியினால் நிர்மாணிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) வேலை இலக்கம் D-7 இன் கீழ் தரை மாடி முதல் முதலாம் மாடி வரை படிகள் கட்டுவதற்காக ரூபா 48,000 இற்கான மொத்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், படி வரிசையின் கீழ் பகுதி சாந்து பூசப்பட்டிருக்கவில்லை.

(v) மதிப்பீட்டின் வேலை இலக்கம் D-3 மற்றும் D-4 இன் கீழ் கொங்கிரீட் தூண்களுக்காக 12 மி.மீ. கம்பி பயன்படுத்தப்பட வேண்டும் எனினும், கொங்கிரீட் தூண்களுக்காக 10 மி.மீ. கம்பிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த வேலை விடயத்திற்காக ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு ரூபா 49,522 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(vi) சுவர்கள், சீமெந்துக் கற்களினால் நிர்மாணிப்பதற்காக தென் மாகாண பொறியியல் சேவை அலகினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அதனை கவனத்திற்கு எடுக்காமல் வேலை விடயம் D-10 இன் கீழ் சுவர்கள் சீமெந்து கற்களினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 42,512 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(vii) வேலை விடய இலக்கம் F1, F3 மற்றும் F4 இன் கீழ் அலுமினிய கதவுகள், யன்னல்களில் காணப்பட வேண்டிய நியமம் மற்றும் அளவைகள் தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தேவையான பலம் மற்றும் செம்மை என்பன இன்றி அலுமினிய யன்னல்கள் கதவுகள் என்பன பொருத்தப்பட்டிருந்தன. சுவர் மற்றும் நிலைகளிடையே ¼ அங்குலம் அளவில்

இடைவெளி காணப்பட்ட இடங்கள் காணப்பட்டன. எனினும் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது விரிவான வரைபிற்கு அமைய நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என உறுதிப்படுத்தப்படாமல் அவ்வாறு முறைப்படி நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 64,928 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(viii) வேலை விடயம் F2 இன் பிரகாரம் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்த நிலை பூச்சுகள் அரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் ஒட்டுப் பலகைக் கதவுகள் வெடிப்படைந்து விலகிய நிலையில் காணப்பட்டது. அதற்காக ரூபா 8,499 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ix) வேலை இலக்கம் F6 இன் பிரகாரம் 3¾'' x 2¾'' அளவிலான சட்டகத்தினால் பேன்லைட் ஒன்று வழங்கி பொருத்தப்பட்டுள்ளதென 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய இறுதிப் பில் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அலுமினியன் பேன் லைட் ஒன்று வழங்கி பொருத்தப்பட்டிருந்தது.

(x) 06 மின் குமிழ்கள் மற்றும் 2 பிலக் பேஸ்கள் உடன் வயரின் பண்ணுவதற்காக இறுதிக் கொடுப்பனவு பில்பத்திரத்தில் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 43,987 எனினும் கொடுப்பனவுவிற்கான பகுப்பாய்வு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவை அல்லாத பில்க்பேஸ்கள் பொருத்தப்பட்டிருந்தன.

## 2.9 செயற்பாட்டுத் திறமையின்மை

### 2.9.1 சபையின் ஊழியர்களுக்கு அரச வங்கிகளில் இருந்து கடன் வழங்குதல்

41 சபை ஊழியர்களுக்கு அரச வங்கிகளில் இருந்து வழங்கியிருந்த ஆதனக் கடன்கள் தொடர்பாக 2008 ஜுலை முதல் 2010 திசெம்பர் மாதம் வரை காலப்பகுதியின் போது அரசாங்க வட்டிப் பங்களிப்பு என சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த ரூபா 2,302,740 தொகையினை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்திருக்கவில்லை.

### 2.9.2 தீ அணைப்பு மற்றும் மீட்பு இயந்திரத்தை துறைமுகத்தில் இருந்து விடுவிக்காமை

யப்பானைச் சேர்ந்த ஜே.பீ.ஆர். நிறுவனத்தில் இருந்து மா நகர சபைக்கு நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த தீ அணைப்பு மற்றும் மீட்பு இயந்திரத்தை துறைமுகத்தில் இருந்து விடுவிப்பதற்காக முன்னைய நகர கணக்காளர் 2006 மார்ச் 22 திகதிய இலக்கம் 289 கொண்ட உறுதிச் சான்றின் மூலம் பெற்றிருந்த ரூபா 85,000 இற்கான முற்பணம் 2010 நவம்பர் 09 திகதிய 137ஆம் இலக்க உறுதிச் சான்றின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 அக்டோபர் 18 திகதி வரையும் குறிப்பிட்ட வாகனத்தை துறைமுகத்தில் இருந்து விடுவித்து சபைக்கு கொண்டுவந்திருக்கவில்லை.

### 2.9.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்களில் சமர்ப்பிக்காமை

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் அனைத்து சபை அங்கத்தவர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக 16 நகர சபை அங்கத்தவர்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்